## தலைப்பு 018 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 018 - பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்திற்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 127(5) பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் செலவினம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 18-1-1-0-1301 செலவின விடயத்தின் ரூபா 4,000,000 தொகையான ஆரம்ப செலவின மதிப்பீட்டுக்காக ஆண்டினுள் நி.பி. 66 இன் ஊடாக ரூபா 210,000 ஆன மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிதியேற்பாட்டிலான சேமிப்பு ரூபா 338,916 ஆக காணப்பட்டது. | 1301 செலவின விடயத்திற்குரிய வாகனப் பராமரிப்பு தொடர்பான பட்டியல்கள் 2023 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தினுள் சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தால் அந்த செலவின விடயத்தில் 2022 ஆம் ஆண்டின்றாக நிதியேற்பாடு மாத்திரம் எஞ்சியது. | துல்லியமான மதிப்பீடுகளைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பு (iii) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 828,745 ஆன பொறுப்புகள் | பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின்படி உரிய தேதிகளில் Cigas அமைப்பு | அலுவலக புத்தகங்களை திறைசேரியின் அச்சுப் பிரதியுடன் |

| | | |
|---|---|---|
| திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், அந்த பொறுப்புகள் 2023 ஆம் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலம் கடன் தரவு உள்ளிடப்பட்டது. பொறுப்புகள் தொடர்பான கொடுப்பனவுகள் மீதமுள்ள விதிகளுக்கு உட்பட்டு செய்யப்பட்டுள்ளன. | ஒப்பிட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மைகள்** | | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணனக் கோவை** | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137 | 427,712 | 09 உறுதிச்சீட்டுகளுக்காக அங்கீகரிக்காது பணம் செலுத்தப்பட்டிருந்தது. | தவறுதலாக அங்கீகரிக்கப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அது திருத்தப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 138(8) | 42,650 | 06 உறுதிச்சீட்டுகளுக்காக செலவினங்களை சான்றுபடுத்தாது பணம் செலுத்தப்பட்டிருந்தது. | தவறுதலாக கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளின் செலவினங்களை சான்றுபடுத்தாது பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதனை திருத்துவதற்கு நடவடிக்கை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சான்றுபடுத்தப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. | |
| (iii) | நிதிபிரமாணம் 225(4) | 127,793 | 07 உறுதிச்சீட்டுகளை தயாரிக்கும் அல்லது அவற்றின் திருத்தங்களை பார்க்கும் உத்தியோகத்தர்களால் சிறு கையொப்பத்திற்கு இடம் விடப்பட்டுள்ள இடத்தில் தமது சிறு கையொப்பத்தினை இட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உறுதிச்சீட்டுக்களை பரிசோதித்தமைக்காக கையொப்பம் இட்டு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உறுதிச்சீட்டுகளை, தயாரிக்கும் அதிகாரிகள் அல்லது அவற்றின் சரியான தன்மையைச் சரிபார்க்கும் அதிகாரிகள் தங்கள் குறுகிய கையொப்பங்களை உரிய இடத்தில் இட்ட பின்னர் கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 232(2) மற்றும் 245(1) | 60,068 | 03 உறுதிச்சீட்டுகளின் கொடுப்பனவு மேற்கொண்ட தொகை எழுத்துக்களில் குறிப்பிடப்படவில்லை. | தவறுதலாக இடம்பெற்றுள்ளது. உரிய உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், கொடுப்பனவு மேற்கொண்ட தொகை எழுத்துக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 267(1) | 37,083,232 | ஊழியர் ஒருவரின் சம்பளம் / படியினை நிறுவனத்திற்கே செலுத்தி, அதனை பொறுப்பேற்றமை தொடர்பில் வழங்குநரின் கையொப்பமின்றி சம்பளம் செலுத்தப்பட்டிருந்த 14 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இது தொடர்பில் உரிய ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் சம்பளப் பட்டியலில் கையொப்பமிடாத உத்தியோகத்தர்களின் சம்பளத்தை இடைநிறுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வழங்குநரின் கையொப்பம் உரியசம்பளப் பதிவு பத்திரத்தில் அல்லது சம்பளப் பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | நிதிப்பிரமாணம் 453(2)(ஐ) | 89,201,190 | ஆளனி வேதனப் பட்டியலில் பதிவுகளை முழுமையாக பதிவு செய்து, மொத்தமாக கணக்கிட்டு, ஒப்பிட்டு பார்த்தமைக்கான சான்றுபடுத்தலின்றி 27 உறுதிச்சீட்டுகளுக்காக சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | அனைத்து வவுச்சர்களும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் ITMIS கட்டமைப்பின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டன, இது தவறுதலாக நடந்துள்ளது. வரும் காலங்களில் சரி செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அனைத்து சம்பளப் பட்டியல்களும் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் IV ஆம் பந்தி | 197,273 | வழக்கமான பணி நேரத்திற்குப் பிறகு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கான நேர அடிப்படையை கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் சரிபார்க்க வேண்டும் என்றாலும், ஏப்ரல் முதல் டிசம்பர் வரை ஒரு அதிகாரிக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான நேரம் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர், ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவிக்கு மேலதிகமாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் என்ற வகையில், அவரது கடமைகள் இந்த அலுவலகத்திலிருந்தும நகர அபிவிருத்தி அமைச்சினை போன்று கம்பஹாவில் அமைந்துள்ள அலுவலகத்திலிருந்தும் மேற்கொள்கின்றமையால் இந்த அலுவலகத்தின் வருகை மற்றும் புறப்பாடு பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், இப்போது, கைரேகை இயந்திரம் மூலம் அவர் வருகை மற்றும் புறப்பாடு பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மற்றும் 2022 திசெம்பர் மாதம் முதல், அவருக்கு பாராளுமன்ற கொடுப்பனவுகள் மற்றும் உத்தியோகபூர்வ கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. | |
| (ii) | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டியின் 6.2 ஆம் பந்தி | - | அறிக்கையிடும் நிறுவனத்திற்குரிய செலவின விடயங்கள் மாத்திரம் மாதிரிப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன், தமது நிறுவனத்திற்கு உரித்தற்ற மாதிரிப் படிவங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை 02/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கமைய மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கை வழிகாட்டல் இலக்கம் 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி அதற்கிணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது உரிய மாதிரிக்கமைய தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டுக்கான பெறுகைகள் திட்டத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பெறுகைகள் திட்டத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வுப் பணி உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அலுவலகம் 'பீ' தரத்திலான திணைக்களமொன்றாவதுடன், மிகவும் வரையறுக்கப்பட்ட பதவியணி மற்றும் செலவினத் தலைப்பின் கீழ் மிகவும் குறைந்த அளவான நிதியேற்பாடு காண்பிக்கப்படுகின்றமையால், உள்ளகக் கணக்காய்வு குழுவினை நியமித்தல் தேவையற்றது என சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டினை சிறந்த முறையில் பேணுவதற்காக கணக்காளர் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

**5.1 மனிதவள அபிவிருத்தி திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் வகுப்பின் பிரகாரம் இனங்காணப்பட்ட திறன்களை இலக்கிட்டு குறித்த இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு உரிய இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் காணப்படும் மாதிரியை அடிப்படையாக கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | கடந்த வருடத்தின் முதல் நிதி அமைச்சின் செயலாளரின் 05/2022 ஆம் இலக்க 2022.09.02 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பணம் ஒதுக்க வேண்டாம் என அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படாததுட், மிக்வும் அத்தியாவசியமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உத்தியோகத்தர்கள் முன்வைக்கப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |